Written by - க.எஸ்.சுதாகர் -
Friday, 26 July 2019 08:37 - Last Updated Friday, 26 July 2019 09:04

- எழுத்தாளர் உதயணன் ;டொரோண்டோ அவர்கள் 23.7.2019 காலமானார். அவரபை்பற்றி ஏற்கனவே எழுத்தாளர் க.எஸ்.,.சுதாகர் அவரது சுருதி வலபை்ப□வில் எழுதிய இக்கட்டுரையினை அவரது நினவைாகப் பதிவு சயெ்கின்றோம். - பதிவுகள் -

---

கடந்த வருட ஆரம்பத்தில் 'பின்லாந்தின் பசுமை நினவைுகள்' என்ற புத்தகத்தை வாசித்திருந்தனே். உதயணன் என்னும் புனபையெரகை் கொண்ட ஆர்.சிவலிங்கம் என்பவர் அதன் ஆசிரியர். கனடாவில் இருந்து அவுஸ்திரலேியாவிற்கு வந்திருந்த, பல்கலகை்கழகத்தில் என்னுடன் ஒன்றாகப் படித்திருந்த நண்பன்---ஆசிரியரின் மருமகன்--அந்தப் புத்தகத்தை எனக்கு தந்திருந்தார்.

உதயணன் 1957 – 1980 காலப்பகுதிகளில் வீரகசேரி, தினகரன், சுதந்திரன், ஈழநாடு, சிந்தாமணி, தினபதி மலர், சுடர், அஞ்சலி, கலசை்சலெ்வி, தமிழரோசை, தமிழின்பம் பரோன்றவற்றில் எழுபதிற்கும் மறே்பட்ட சிறுகதகைளை எழுதிக் குவித்தவர். கல்கி, குமுதம் பரோன்ற இந்திய இதழ்களிலும் சில படபை்புகள் வந்துள்ளன. கலசை்சலெ்வியில் 'இதய வானிலே', 'மனப்பாறை' ஆகிய நாவல்களும், வீரகசேரிப் பிரசுர நாவல்களாக 'பொன்னான மலரல்லவோ', 'அந்தரங்ககீதம்' (சில மாறுதல்களுடன் 'மனப்பாறை') பரோன்ற நாவல்களையும் எழுதியிருுக்கின்றார். மலேும் மித்திரன் நாளிதழில் 'மனக்கோட்டை' தொடர்கதை, சிந்தாமணியில் 'கொடிமல்லிகை' குறுநாவல் வந்துள்ளன. அத்துடன் நகசை்சுவகை் கட்டுரை, இதழியல், மொழிபயெர்ப்பு என்பவற்றிலும் சிறந்து விளங்குகின்றார்.

ஆரம்பத்தில் ஆசிரியராக நாவலப்பிட்டியிலும், பின்னர் அரசாங்க எழுதுவினஞைராக பல்வறே பகுதிகளிலும் கடமயைாற்றினார். சில வருடங்கள் ஈராக்கில் பணி புரிந்தார்.

களுத்துறயைில் வளெிவந்த 'ஈழதவேி' இதழின் வளர்ச்சிக்கும், அது பின்னர் இடம் மாறி - சிற்பி சி. சிவசரவணபவனை ஆசிரியராகக் கொண்டு 1958 முதல் 1966 வரை வளெிவந்த 'கலசை்சலெ்வி' சஞ்சிகயைின் வளர்ச்சியிலும் முன்னின்று உழதை்தவர். இவரது நண்பர் பாலசுப்பிரமணியம் களுத்துறை தமிழ்க்கழகத்தின் சார்பில் 'ஈழதவேி' இதழை நடத்தி வந்தார். 1956 இல் வந்த 'சிங்களம் மட்டும்' சட்டமும் 1958 இனக்கலவரமும் தனெ் இலங்கயைில் ஓரு தமிழ்ச்சஞ்சிகயைை நடத்த முடியாத சழ□நிலயைை உருவாக்கியபோது, இவர்கள் இருவரும் சிற்பியசை் சந்தித்தார்கள். அந்தச் சந்திப்பே 'கலசை்சலெ்வி' இதழ் வளெிவர அத்திவாரமானது.

இவர் தனது எழுத்துலகிற்கு வித்திட்டவர்களாக யாழ்.பரமஸேுவராக் கல்ல□ரி தமிழாசிரியர் இ.கதேீஸ்வரநாதன், மற்றும் வித்துவான் வநே்தனார், பண்டிதர் மு.ஞானப்பிரகாசம்

என்பவர்களை நினைவூகூர்கின்றார்.

1983 இல் இருந்து 25 வருடங்கள் பின்லாந்தில் வசித்துவந்த உதயணன், தற்போது கனடாவில் வசிக்கின்றார் என்ற செய்தியை நண்பர் சொன்னார். அவரது 'பின்லாந்தின் பசுமை நினைவுகள்' நூலை வாசிக்கத் தொடங்கியதும் பின்லாந்து நாட்டினுள் நான் பயணமாகத் தொடங்கினேன். வாசிக்கத் தூண்டும் விதத்தில் நகைச்சுவை உணர்வுடன் அந்தப் பூத்தகம் எழுதப்பட்டிருந்தது.

உலகிலே சிறந்த கல்விக் கட்டமைப்பைக் கொண்டு விளங்கும் நாடுகளில் பின்லாந்து முதன்மையான இடத்தை வகிக்கின்றது. அத்தகைய நாட்டில் ஹெல்சிங்கி பல்கலைக்கழகத்தில் ஆய்வு உதவியாளராகவும், பகுதி நேர தமிழ்மொழி விரிவுரையாளராகவும் 1986 இல் நியமனம் பெற்றார். பழந்தமிழ் இலக்கியங்களைப் பின்னிஷ் மொழியில் மொழிபெயர்க்கும் பணி இவருக்குக் கொடுக்கப்பட்டிருந்தது. அந்த வகையில் திருக்குறள், சிலப்பதிகாரம் என்னும் படைப்புகளில் இவர் பங்களிப்புச் செய்திருந்தார். அத்துடன் பின்லாந்தின் தேசிய காவியமான செய்யுள் வடிவில் அமைந்த 'கலவேலா' (KALEVALA) என்பதை மூலமொழியான பின்னிஷ் மொழியில் இருந்து தமிழிற்கு மொழிபெயர்த்தார். மூன்று ஆண்டுகால கடும் பணியின் நிமித்தம், 1994 ஆம் ஆண்டு பின்னிஷ் மொழியிலிருந்து தமிழிற்கு வந்த முதல் நூல் என்னும் பெருமை கொள்கின்றது 'கலவேலா'.

'கலவோ' இனத்தவர் வாழ்ந்த இடம் 'கலவேலா'. வாய்மொழிப் பாடல்களாக இருந்தவற்றை எலியாஸ் லொண்ரொத் (Elias Lonnrot) என்பவர் தொகுத்தார். பின்லாந்தின் பூகழ்பெற்ற இசைக்கலைஞரான ஜியென் சிபலெலியூஸ் (Jean Sibelius) என்பவர் இப்பாடல்களில் சிலவற்றிற்கு இசை வடிவம் கொடுத்துள்ளார். கலவேலா பின்னிஷ் மொழி பேசும் மக்களின் கிறிஸ்துவிற்கு முற்பட்ட காலத்து மதத்தையும் வீரப்பண்புகளுடனை பூனகைதகைளையும், கிறிஸ்துவிற்குப் பிற்பட்ட முதல் ஆயிரம் ஆண்டுப் பகுதியில் நிகழ்ந்த ஸ்கண்டினேவியக் கடல்வீரர்களின் தாக்குதல்களினால் ஏற்பட்ட கலவேலாவின் பேரே நடவடிக்கைகளையும் கொண்டுள்ளது. இறுதிப்பாடல், பின்லாந்து

நாட்டை வறெ்றி கொண்ட சுவீ டிஷ்காரர் கி.பி 1155ல் பலவந்தமாகக் கொண்டுவந்த கிறிஸ்துவத்தின் வறெ்றியை கரும்வாகக் கொண்டது.

சயெ்யுள் நடையில் / மரபுக்கவிதை வடிவில் தமிழில் வந்த ‘கலவேலா’வை சாதாரண மக்களால் புரிந்து கொள்ள முடியாமல் இருந்ததால் ’உரைநடையில் கலவேலா’ 1999 இல் வளெிவந்தது. இது இலங்கை அரசின் 1999 ஆம் ஆண்டுக்கான சாகித்திய இலக்கிய விருதை பறெ்றது.

இவர் வாழ்ந்த காலத்தில், பின்லாந்தில் தமிழ் ஆர்வமும், இலக்கிய அறிவும் உள்ளவர்கள் இல்லாதபோது - ஹலெ்சிங்கி பல்கலைக்கழகத்தில் உதயணனிற்கு பின்பாலமாக நின்று எல்லாவறெ்றையும் இயக்கியவர் உலகத் தமிழ் அறிஞர்களில் ஒருவரான பரோசிரியர் அஸ்கோ பார்பொலா (Dr Asko Parpola). இவர் ஆசிய ஆபிரிக்க நாடுகள் தொடர்பான கல்வித்திணைக்களத்தின் இந்தியவியல் அம்பந்தப்பட்ட கல்விக்கும் பொறுப்பாக இருந்தவர். உதயணன் ஹலெ்சிங்கி பல்கலைக்கழகத்தில் 19 வருடங்கள் தமிழ் கறெ்பித்தார்.

உதயணன் சமீ ப காலங்களில் வளெியீ டு சயெ்த பூத்தகங்கள் ‘பின்லாந்தின் பசுமை நினைவுகள்’ கட்டுரைதை் தொகுப்பு, ‘பிரிந்தவர் பசேினால்’, ‘உங்கள் தீ ர்ப்பு என்ன?’ சிறுகதைதை் தொகுப்புகள். இந்த இரண்டு தொகுதிகளிலும் அடங்கும் சிறுகதைகள் 1957 - 80 ஆண்டு காலப்பகுதிகளில் வளெிவந்தவை.